[1992 மார்ச் 16

திரு. செ. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த வினாவிற்கு ' இல்லை ' என்று கூறினார்கள். எனது தொகுதியிலே கருமந்துரையை மையமாக வைத்து ஒரு தொழில் மையம் அமைப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரவர்களும், சேலம் மாவட்டத் தொழில் மைய உதவி இயக்குநர் அவர்களும் பார்வையிட்ட பொழுது அந்தப் பகுதியிலே இருக்கின்ற பொது மக்களும், சட்ட மன்ற உறுப்பினராகிய நானும், மற்றும் அந்தத் தொழிலை எடுத்து நடத்த முன் வருவோரும், இந்தப் பகுதியிலே ஒரு தொழில் மையம் அமைத்தால் இந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களும், படித்த இளைஞர்களும், குறிப்பாக ஆதி திராவிடர்களும், பழங்குடி இன மக்களும் பயன் பெறுவார்கள் என்ற ஒரு குறிப்பான குறிக்கோளை வைத்து, அமைத்துத் தந்தால் நன்றாக இருக்கும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க மாவட்ட ஆட்சித் தலைவர் இந்தக் குறிப்பினைப் பரிந்துரை செய்து அரசுக்கு அனுப்புகின்றோம், அதன் பேரிலே நாங்கள் ஆர்வமாக இருக்கிறோம் என்பதை என்னிடத்திலே கூறியதால் இந்த வினாவை நாங்கள் எழுப்பியிருக்கிறோம். மீண்டும் ' இல்லை ' என்று சொல்லாமல், தாயுள்ளம் கொண்ட நமது இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே மீண்டும் பரிசீலனை செய்து ஆவன செய்வதற்கு அமைச்சர் முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் கொள்கை அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரங்களிலும் ஒரு மாவட்டத் தொழில் மையங்கள் உள்ளன. எனவே, கல்வராயன் மலை கருமந்துரை சேலம் மாவட்டத்தின் கீழ் வருவதால், சேலம் மாவட்டத்தில் ஏற்கெனவே ஒரு தொழில் மையம் உள்ளது. எனவே இந்தக் கோரிக்கைக்கு இடமில்லை எனக் கருதுகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

235—

ஆதிதிராவிடர் ஆரம்பப்பள்ளியை நடுநிலைப்பள்ளியாக்கல்.

*2142 திரு. ஜி. பழனிசாமி :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி அபிசேகக்கட்டளை ஆதிதிராவிடர் ஆரம்பப்பள்ளியை நடுநிலைப் பள்ளியாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?